**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

***11th அக்டோபர் / October 2026 ஞாயிறு ஆராதனை / Sunday Service***
***Laity Sunday / சபையார் ஞாயிறு***

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு** Call to Worship | திரு. பிரேம்குமார் Mr. Premkumar |
| **இறைவணக்கப்பாடல்** Introit | **பாடகர் குழு** Choir |
| **ஜெபம்** Prayer | திரு. பிரேம்குமார் Mr. Premkumar |
| ✝ **தொடக்க பாடல்** Opening Song | **சபையார் இணைந்து** Congregation |

**அலங்கார வாசலாலே**

*1.* அலங்கார வாசலாலே
கோவிலுக்குள் போகிறேன்
தெய்வ வீட்டின் நன்மையாலே
ஆத்துமத்தில் பூரிப்பேன்
இங்கே தெய்வ சமூகம்,
மெய் வெளிச்சம், பாக்கியம்.

*2.* கர்த்தரே, உம்மண்டை வந்த
என்னண்டைக்கு வாருமேன்.
நீர் இறங்கும்போதானந்த
இன்பத்தால் மகிழுவேன்
எனது இதயமும்
தெய்வ ஸ்தலமாகவும்.

*3.* பயத்தில் உம்மண்டை சேர
என் ஜெபம் புகழ்ச்சியும்
நல்ல பலியாக ஏற
உமதாவியைக் கொடும்.
தேகம் ஆவி யாவையும்
சுத்தமாக்கியருளும்.

*4.* நல்ல நிலத்தில் விழுந்த
விதை பயிராகுமே
நானும் அவ்வாறே மிகுந்த
கனிகளைத் தரவே,
வசனத்தைக் காக்க நீர்
ஈவளிக்கக் கடவீர்.

| | |
|---|---|
| ✝ ***மாறி வாசித்தல் 41ம் ஞாயிறு*** ***"சங்கீதம் 119"*** | **சபையார் இணைந்து** Congregation |

**"உம்முடைய வேதம் என் மகிழ்ச்சி"**

**Psalter Reading "Psalm 119"**

| | |
|---|---|
| ✝ **தந்தை போற்றி** Gloria Patri | **சபையார் இணைந்து** Congregation |
| **துதி ஆராதனை** Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்** Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்** Lord's Prayer | **சபையார் இணைந்து** Congregation |
| ✝ **காணிக்கை பாடல்** Offertory Song | **சபையார் இணைந்து** Congregation |

**இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு**

*1.* இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு
அன்பு நிறைந்திடும் இடம் உண்டு

**உயர்வுமில்லை அங்கு தாழ்வும் இல்லை**
**ஏழை இல்லை பணக்காரனில்லை**
**இராஜாதி ராஜா இயேசு**
**என்றென்றும் ஆண்டிடுவார்**

*2.* பாவமில்லை அங்கு சாபம் இல்லை
வியாதி இல்லை கடும் பசியுமில்லை
இராஜாதி ராஜா இயேசு
என்றென்றும் காத்திடுவார்

*3.* இன்பம் உண்டு சமாதானமுண்டு
வெற்றி உண்டு துதி பாடல் உண்டு
இராஜாதி ராஜா இயேசு
என்றென்றும் ஈந்திடுவார்.

| | |
|---|---|
| ✝ **பூலோகத்தாரே யாவரும்** Doxology | **சபையார் இணைந்து** Congregation |
| ✝ **திருமறைப் பாடம்** Scripture Reading ***எபேசியர் 4 :1 - 6, 11 - 16*** Ephesians 4 :1 - 6, 11 - 16 | **திரு. நோயல்** Mr. Noel |
| **அருளுரை** Sermon | **திரு. ஜான்சன் பாபு** Mr. Johnson Babu |
| ✝ **அர்ப்பணகீதம்** Offertory & Closing Song | **சபையார் இணைந்து** Congregation |

**கூடி மீட்பர் நாமத்தில்**

*1. கூடி மீட்பர் நாமத்தில்*
*அவர் பாதம் பணிவோம்*
*யேசுவை இந் நேரத்தில்*
*கண்டானந்தம் அடைவோம்*

***ஆ! இன்ப இன்ப ஆலயம்!***
***நல் மீட்பர் கிருபாசனம்!***
***கண்டடைவோம் தரிசனம்***
***இன்ப இன்ப ஆலயம்!***

*2. இரண்டு மூன்று பேர் ஒன்றாய்*
*கெஞ்சும் போது வருவார்*
*வாக்குப் போல் தயவாய்*
*ஆசீர்வாதம் தருவார் - ஆ! இன்ப*

*3. சொற்பப் பேராய்க் கூடினும்*
*கேட்பதெல்லாம் தருவார்*
*வாக்குப்படி என்றைக்கும்*
*யேசு நம்மோடிருப்பார் - ஆ! இன்ப*

*4. வாக்கை நம்பி நிற்கிறோம்*
*அருள் கண்ணால் பாருமேன்*
*காத்துக் கொண்டிருக்கிறோம்*
*வல்ல ஆவி வாருமேன் - ஆ! இன்ப*

**அறிவிப்புகள்**
Announcements

✝ ***மனப்பாட வசனங்கள்***
Memory Verses

***சபையார் இணைந்து***
Congregation

***ரோமர் 13 : 8***
Romans 13 : 8

***8. ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்***
Closing Prayer & Benediction

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ **Indicates Congregation standing**